**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே**

# அன்னைத் தமிழ்முற்றம் - 2022

இணையவழி நிகழ்வு - ஆத்திசூடி - ஆண்டு 1

**காலம்: 08.01.22 அல்லது 09.01.22 - சனி 15.00 அல்லது ஞாயிறு 11.00**

எம்மால் வழங்கப்பட்ட ஆத்திசூடிகளில் குறைந்தது ஐந்தினை (5) ஒப்பித்தல் விரும்பத்தக்கது.

## ஆத்திசூடி

1. **அறம் செய விரும்பு.**

   *பொருள்: நற்பணிகளைச் செய்ய ஆசைப்படு.*

2. **ஆறுவது சினம்.**

   *பொருள்: கோபம் தணிக்கப்பட வேண்டியதாகும்.*

3. **இயல்வது கரவேல்.**

   *பொருள்: நம்மால் இயன்றதை, முடிந்ததை செய்யாமல் இருக்கக்கூடாது.*

4. **ஈவது விலக்கேல்.**

   *பொருள்: உதவும் குணத்தை நிறுத்தாதே.*

5. **உடையது விளம்பேல்.**

   *பொருள்: நம்மிடம் உள்ள செல்வம் குறித்து தற்பெருமை பேசுதல் கூடாது.*

6. **ஊக்கமது கைவிடேல்.**

   *பொருள்: எப்போதும் முயற்சியைக் கைவிடாதே.*

7. **எண் எழுத்து இகழேல்.**

   *பொருள்: கணிதத்திற்கு ஆதாரமான எண்ணையும் மொழிக்கு ஆதாரமான எழுத்தையும் இகழக்கூடாது.*

8. **ஏற்பது இகழ்ச்சி.**

   *பொருள்: பிறரிடம் இரப்பதை இயலுமானவரை தவிர்.*

9. **ஐயம் இட்டு உண்.**

   *பொருள்: மற்றவர்க்கும் கொடுத்து நாமும் உண்ண வேண்டும்.*

10. **ஒப்புரவு ஒழுகு.**

    *பொருள்: உலகத்தோடு சேர்ந்து வாழ வேண்டும்.*

11. **ஓதுவது ஒழியேல்.**

    *பொருள்: அறிவு தரக்கூடிய நூல்களைப் படிப்பதை எப்பொழுதும் நிறுத்தக்கூடாது.*

12. **ஔவியம் பேசேல்.**

**08.01.22 சனி அல்லது 09.01.22 ஞாயிறு என்பதை விண்ணப்பபடிவதில் தெரிவு செய்யலாம். தேவையேற்படின் மாற்றம் செய்யப்படும்**

*பொருள்: ஒருவரிடமும் பொறாமை கொண்டு பேசாதே.*

13. **அ∴கஞ் சுருக்கேல்.**

*பொருள்: அதிக இலாபத்துக்காக தானியங்களை குறைத்து அளந்து விற்காதே.*

**08.01.22 சனி அல்லது 09.01.22 ஞாயிறு என்பதை விண்ணப்பபடிவதில் தெரிவு செய்யலாம். தேவையேற்பபடின் மாற்றம் செய்யப்படும்**